பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி04 வெள்ளிக்கிழமை 20.09.2024 கதிர் 317




## பணிக்குத் திரும்பியது 'நெடுந்தாரகை' கப்பல்

நெடுந்தீவுக்கான பயணிகள் சேவையில் ஈடுபடும் 'நெடுந்தாரகை' கப்பல் மறுசீரமைப்புப் பணிகளுக்குப் பின்னர் நேற்று மீண்டும் பணிக்குத் திரும்பியுள்ளது. கடற்படையினரால் சீரமைக்கப்பட்ட இந்தக் கப்பல் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் வடக்கு மாகாண ஆளுநரால் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

நெடுந்தீவு இறங்குத்துறைக்குச் சென்ற ஆளுநர் படகை பார்வையிட்ட பின்னர் அதனைவீதிஅபிவிருத்தி ☞ 8

## அனைவரும் வாக்களியுங்கள்

### தேர்தல் ஆணைக்குழு தலைவர் கோரிக்கை

தயவு செய்து அனைவரும் வாக்களியுங்கள். உங்கள்வாக்கு உங்களின் உரிமை அதனை ஜனநாயக முறையில் வெளிப்படுத்துங்கள். பிறருக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் உரிமைகளைக் கொண்டாடுங்கள் என்று தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ரத்நாயக்க ☞ 2

## 2ஆம் விருப்பத் தேர்வை எண்ணுவதற்கு ஏற்பாடு

2024 ஜனாதிபதித் தேர்தலில் இரண்டாம் விருப்பத்தேர்வை எண்ணுவதற்குத் தேவையான ஏற்பாடுகள் அனைத்தையும் உடனடியாகத் தயார் செய்யுமாறு அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கும் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

அனைத்து வாக்கு எண்ணும் மையங்களிலும் 2ஆம் விருப்பு வாக்குகளை எண்ணுவதற்கு அதிகாரிகள் தயாராக இருக்கவேண்டும் என்று எழுத்து மூலமாக அறிவுறுத்தப்பட்டுள்ளனர.

இதேவேளை, வாக்களிப்பு நிலையங்களின் பாதுகாப்பிற்காக பொலிஸாக்கு மேலதிகமாகப் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

ரெலோவின் நாடாளுமன்ற உறுப்பினர்வினோநோகராதலிங்கம் திடீரென ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கே தனது ஆதரவு என்று கொழும்பில் போய் ரணிலின் அலுவலகத்திலேயே அமர்ந்திருந்து கொண்டு அறிவித்ததைத் தொடர்ந்து கட்சியின் உயர் அரசியல்பீடம் புதன்கிழமை இரவு பற்றிக்கொண்டு எரிந்துள்ளது.

வினோவின் அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து புதன்கிழமை இரவு எதுவித முன்னறிவித்தலுமின்றி ரெலோவின் அரசியல் உயர்பீடம் 'சூம்' நிகழ்நிலை (ஒன்லைன்) வசதியூடாக அவசரமாகக் கூட்டப்பட்டது. அதில், உடனடியாக நாடாளுமன்ற உறுப்பினர் வினோவை கட்சியில் இருந்து இடைநிறுத்தி, அவரிடம் விளக்கம் கேட்கப்படவேண்டும் என்று தலைவர் செல்வம் மற்றும் செயலாளர் ஜனா ஆகியோர் கொதித்துள்ளனர். ☞ 2

## சமூக ஊடகங்களை கண்காணிக்கக் குழு

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அமைதியான காலப்பகுதியில் சமூக ஊடகங்களின் செயற்பாடுகளை ஆராய்வதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவினால் தனியான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகப் பிரதித் தேர்தல் ஆணையாளர் பியூமி அடிகல தெரிவித்தார்.

ஐந்து பேர் கொண்ட குழு ☞ 8

# வாக்குப்பெட்டிகள் அனுப்பப்பட்டன




2024 ஜனாதிபதித் தேர்தலில் வாக்குப் பெட்டிகளாகப் பயன்படுத்தப்படவுள்ள அட்டைப்பெட்டிகள் நாடு முழுவதும் உள்ள அனைத்துத் தேர்தல் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தப்பெட்டிகள் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களால் இன்று இந்தப வாக்குப்பெட்டிகள் வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பப்படவுள்ளன.

வாக்குச் சீட்டின் அளவு பெரியதாக இருப்பதால், இம்முறை மரப்பெட்டிகளுக்குப் பதிலாக அட்டைப் பெட்டிகளைப் பயன்படுத்த ☞ 2

## தலையிடியாகிய தலைக்கவசம்

### யாழ். தொடருந்து சேவை நிறுத்தம்

அநுராதபுரம்தொடருந்துநிலையத்தின் தரிப்பிடத்தில் மோட்டார் சைக்கிள் தலைக்கவசம் திருடப்பட்டதாகக் கூறி தொடருந்து கட்டுப்பாட்டாளர்களால் தொடங்கப்பட்ட பணிப்புறக்கணிப்புக் காரணமாக புதன்கிழமை காலை அனுராதபுரத்திலிருந்து காங்சேன்துறை வரை செல்ல இருந்த தொடருந்துப் பயணம் நிறுத்தப்பட்டது

அநுராதபுரம்தொடருந்துநிலையக்கில் கடமையாற்றும்பணியாளர்ஒருவர் ☞ 8

## கடன் மறுசீரமைப்புச் செய்திகள் வாக்குகளைக் கவரும் முயற்சி

### ஐக்கிய மக்கள் சக்தி எதிர்ப்பு

தனியார் கடன்மறுசீரமைப்புத் தொடர்பில்ஆளும்தரப்புநேற்றுவெளியிட்ட அறிவிப்புவாக்காளர்களைக்கவர்வதற்கான முயற்சிஎன்றுஎதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தேர்தல் ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் சட்டத்தரணிகள்கூட்டமைப்பு உறுப்பினரான ஷியான் புஞ்சிஹேவா, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சமன் ரத்நாயக்கவுக்கு எழுதிய கடிதத்தில், வெளிநாட்டு வர்த்தகக் கடன் வழங்குநர்களுடனான ஒப்பந்தம் தொடர்பாக ஆளும் தரப்பு வெளியிட்டுள்ள அறிக்கை வாக்காளர்களை பாதிக்கும் முயற்சியாகும் என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

'மறுசீரமைப்பு ☞ 8

## புலமைப் பரிசில் பரீட்சை விவகாரம் விசாரணைகளின் பின்னரே முடிவு

### கல்வி அமைச்சு நேற்று அறிவிப்பு

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்துவதா இல்லையா என்பது குறித்து விசாரணைகளின் முடிவில் தீர்மானிக்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இதேவேளை, பரீட்சைக்கு முன்பாகவே வினாத்தாள்கசிந்தபிரச்சினைதொடர்பாக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில்அதிபர், உப அதிபர், ஆசிரியர்எனமூவர் சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை வினாக் களில் சில ஏற்கனவே வெளியாகிஇருந்தனஎன்று கூறப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பாககல்விஅமைச்சு விசேட அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அதில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையின் முதலாவது வினாத் தாள் தொடர்பில் ☞ 2

## மேலும் 3.3 பில்லியன் டொலர் கடன்மறுசீரமைப்பு சாத்தியம்

மேலும் 3 பில்லியன் டொலர் தனியார் கடன்களை மறுசீரமைப்பதற்கான இணக்கம் எட்டப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இலங்கையின் 17.5 டொலர் பில்லியன் தனியார் வணிகக் கடன்களை மறுசீரமைப்பதற்கு இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது என்று ஜனாதிபதிசெயலகம்அறிவித்துள்ளது.

சீன அபிவிருத்தி வங்கியிடம் பெறப்பட்ட 3.3 பில்லியன் டொலர் பெறுமதியான கடன்களை மறுசீரமைப்பதற்கான இணக்கப்பாடு இலங்கையால்நேற்றுஎட்டப்பட்டதை அடுத்து, சீன எக்ஸிம் வங்கி, உத்தியோகபூர்வ கடன்வழங்குனர் குழு, வர்த்தகக்கடன்வழங்குனர்கள், சர்வதேச பிணைமுறிதாரர்கள் ஆகியோருடன்ஏற்கனவேஎட்டப்பட்ட இணக்கப்பாடுகளின் மூலம் இலங்கையால்சுமார்17.5பில்லியன் டொலர் பெறுமதியான கடன்களை மறுசீரமைக்கமுடிந்துள்ளதாக ஜனாதிபதிசெயலகம்தெரிவித்துள்ளது.

இதன்மூலம் வட்டிவீதங்களைக் குறைப்பதற்கும், நாட்டின் ☞ 8

## மனைவியின் கையை துண்டாடிய கணவன்

### சந்தேகத்தால் நிகழ்ந்த கொடூரம்

ஆத்திரமடைந்த கணவன் தனது மனையின் கையை வெட்டி இரண்டாகத் துண்டாடிய சம்பவம் அளவெட்டியில் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபரான கணவன் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவித்தனர்.

தனது மனைவிக்கு வேறு ஒருவருடன் இரகசிய உறவு இருப்பதான சந்தேகத்திலேயே இந்தக் கொடூரம் நிகழ்ந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். மனைவி தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்தபோது, அவர்தனதுகாதலனுடன்தான்உரையாடுகிறார் ☞ 8

## படுக்கையிலிருந்து விழுந்தவர் யாழ்ப்பாணத்தில் உயிரிழப்பு

யாழ்ப்பாணம் நகரில் உள்ள உணவகம் ஒன்றில் பணிபுரியும் ஊழியர்ஒருவர்தங்கும்அறையில் உறங்கிக் கொண்டிருந்த போது படுக்கையில் இருந்து விழுந்து உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட மீரான் சைது முகம்மது என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவர் யாழ்ப்பாணம் நகரிலுள்ள உணவகம் ஒன்றில் பணிபுரிந்து வந்துள்ளார். ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஜனாதிபதித் தேர்தலில் அரியநேத்திரனை ஆதரிப்பது என்று கட்சி தீர்மானித்த பின்னர் அதற்கு மாறாக முடிவெடுத்திருப்பதன் காரணமாகவே வினோ மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று இருவரும் சீறியுள்ளனர். இ-து கூட்டத்தில் இருந்த சிலருக்குக் கடும் கோபத்தைக் கிளறியுள்ளது. கட்சியின் முடிவுக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றால், கட்சியின் செயலாளர் ஜனா மீதும் பேச்சாளர் சுரேன் குருசாமி மீதும் யாழ்ப்பாணத்தில் முன்னாள் பிரதி மேயர் ஈசன் மீதும் மன்னார் மாவட்ட கட்சிக் கிளையினர் மீதும்கூட ஒழுக்காற்று நடவடிக்கைஎடுக்கவேண்டும், அவர்களிடமும் விளக்கம் கேட்கவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். இவர்களும் கட்சியின் முடிவுக்கு மாறாகச் செயற்பட்டவர்கள்தான் என்றும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கட்சி எடுத்த முடிவுக்கு மாறாக, யாழ்ப்பாணத்தில் ஈசன் மற்றும் நிரோஷ் போன்ற கட்சிக்காரர்கள் பலரையும் தேர்தல் பரப்புரைக் கூட்டங்கள் தவிர வேறு எதற்கும் செல்லவேண்டாம் என்று பேச்சாளரும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண அமைப்பாளர்களின் இணைப்பாளருமான சுரேன் மறித்துள்ளார். அவர் வடமாகாண இணைப்பாளராகஇருந்தபோதும்ஒருநாள்கூட களத்தில் இறங்கி கட்சி முடிவுக்கு ஆதரவாக வேலை செய்யவில்லை.

பொதுக் கட்டமைப்பினரின் வேட்பாளருக்குப் போடுபவர்கள் 2ஆவது தெரிவை மற்றொரு வேட்பாளருக்கும் போடும்படி செயலாளர் ஜனா சொன்னதும் கட்சியின் முடிவுக்கு மாறானதுதான் என்றும் சீறியிருக்கிறார்கள். கட்சியின் முடிவுப்படி மன்னாரில் எந்தப் பரப்புரைப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. வவுனியாவிலும் ஒரு பகுதியினர் மட்டும்தான் ஒப்புக்கு வேலை செய்திருக்கிறார்கள். யார் இவர்களையெல்லாம் தடுத்தது, அது பற்றி விசாரித்து அவர்களிடமும் கட்சி விளக்கம் கேட்கவேண்டும் என்றும் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

தலைவர், செயலாளர் மீதும் குற்றச்சாட்டு விரல்கள் நீட்டப்பட்டதை அடுத்து கூட்டத்தில் காரசாரமான மோதல் ஏற்பட்டுள்ளது. ஒரு கட்டத்தில் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான விந்தனைப் பார்த்து ''உன்னை கட்சியைவிட்டுத் தூக்குவேன்" என்றுபாய்ந்துள்ளார்செயலாளர். வழக்கமாகவே கட்சிக்குள் நேர்மை, நீதி நியாயம்என்றுபேசிசர்ச்சைக்குள்ளாபவர்கள் கிழக்கில் ஹென்றி மகேந்திரன், வடக்கில் விந்தன் போன்ற ஒரு சிலர்தான்.

வடக்கில் விந்தன்தான் அரியத்தாருக்காக அதிகளவில் இறங்கி வேலை செய்தவர். சொன்னாலும் கேட்கமாட்டான் என்ற அடைமொழியுடன் அவரை ஒதுக்கி, வெட்டிவிட்டு காரியமாற்ற தலைமைக்குள் எடுக்கப்பட்ட நடவடிக்கை அவரை மேலும் சீற்றமுற வைத்திருந்ததால் வாய்ப்பைப் பயன்படுத்தி அவர் குதறியிருக்கிறார். மாய்ந்து மாய்ந்து வேலை செய்தபோதும் முத்திரைச்சந்தி கிட்டுப்பூங்காவில் இடம்பெற்ற கடைசிப் பரப்புரைக் கூட்டத்திற்கு கட்சி சார்பில் விந்தனை அனுப்பாமல் வலி. கிழக்கு முன்னாள் தவிசாளர் நிரோஷை அனுப்பியதுவேறு விந்தனை கோபத்தின் உச்சியில் வைத்திருந்தது. இதுதான் வாய்ப்பு என்று அவர் எல்லோரையும் ஒரு பிடிபிடித்துவிட்டார். பாவம் அந்தாள். ஏற்கனவே அவருக்கு காற்றை இறக்கித்தான் வைத்திருக்கிறார்கள். இத்தோடு ஆளையே பிடுங்கிப் போட்டாலும் போட்டுவிடுவார்கள். நுணலும் தன் வாயால் கெடும் என்ற மாதிரி வாய்தான் விந்தனுக்கு ஏழரைச் சனி.

தமிழ் அரசுக் கட்சி விவகாரமும்கூட ரெலோவின் உயர்பீடக் கூ-ட்டத்தில் சுழன்றடித்துள்ளது. தமிழ் அரசுக் கட்சி ஒரு முடிவை எடுத்திருக்கிறது, ஆனால் கட்சித் தலைவரும் சிறீதரனும் அதை மீறி ஒரு பக்கத்தால் போகிறார்கள். சாள்ஸ் நிர்மலநாதன் மற்றொரு பக்கத்தால் போகிறார். அவர்கள் மீதெல்லாம் அந்தக் கட்சி நடவடிக்கை எடுத்துக்கொண்டா இருக்கின்றது? ரெலோவைவிடப் பெரிய கட்சி, மக்கள் ஆதரவு அதிகமுள்ள கட்சி, நீண்ட வரலாற்றுப் பாரம்பரியமுள்ள கட்சி, அப்படிப்பட்ட கட்சியே இந்த விடயத்தில் விட்டுப் பிடிக்கும்போது ஏன் வினோவின் மீது மட்டும் ரெலோ பாயவேண்டும்? மற்றவர்களின் அரசியல் 'டீல்'களுக்கு வினோவின் முடிவு பாதிப்பாக அமைந்துவிடும் என்பதாலா என்றும் கேட்டிருக்கிறார்கள். (தமிழ் அரசுக் கட்சி எதற்கெல்லாம் உதாரணம் ஆகிவிட்டது என்று பாருங்கள். மிகக் கேவலமான ஒரு தலைவர் இருக்கும்போது அந்தக் கட்சிக்கு இதுவும் தேவை இன்னமும் தேவைதான்)

இவ்வளவெல்லம் கதைக்கப்பட்டாலும் வழக்கம்போல, அதையெல்லாம்புறங்கையால் ஒதுக்கிவிட்டு, "அதெல்லாவற்றையும் பிறகு பார்க்கலாம்" என்று அதாவது வினோவைத் தவிர மற்றவர்களும் கட்சி முடிவுக்கு மாறாகச் செயற்பட்டதற்காக விளக்கம் கேட்கும் விடயத்தைப் பிறகு பார்க்கலாம் என்று ஒதுக்கிவிட்டு வினோ எம்.பியை உடனடியாக கட்சியிலிருந்து இடைநிறுத்தி அவரிடம் விளக்கம் கேட்பது என்று ரெலோவின் அரசியல் உயர்பீடம் முடிவெடுத்திருக்கின்றது.

வாழ்க ரணில்! தனக்கு வாலாட்டாத எல்லாக்கட்சிகளையும் உடைத்துச்சிதறடிப்பது என்பதில்ஆள்சாணக்கியன்என்பதைமீண்டும் மீண்டும் நிரூபித்துக்கொண்டே இருக்கிறார். என்ன மக்கள்தான் அவரது அந்தத் திமையை மதித்து அவரை அங்கீகரிக்கிறார்கள் இல்லை இப்போதும்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## வாக்குப்பெட்டிகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் ஆணையம் முடிவு செய்தது. அதன்படி 3 அளவுகளில் அட்டைப் பெட்டிகள் வாங்கப்பட்டுள்ளன.

## புலமைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுந்துள்ள பிரச்சினை தொடர்பில் பரீட்சைத் திணைக்களம் மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்களம் இணைந்து விசாரணை நடத்தி வருகின்றன. இந்த விசாரணைகள் நிறைவடைந்தவுடன் இது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும்.

இவ்வருட புலமைப் பரிசில் பரீட்சையின் முதலாவது வினாத்தாளில் காணப்பட்ட சில வினாக்களுடன் கூடிய மாதிரி வினாத்தாள் ஒன்று அலவ்வ பிரதேசத்தை சேர்ந்த பிரபல மேலதிக வகுப்பு ஆசிரியர் ஒருவரினால் வெளயிடப்பட்டதாக குற்றச்சாட்டுஎழுந்துள்ளது.

இதன்படி, வினாத்தாள் தயாரித்த நிபுணர்கள் குழுவின் இணக்கப்பாட்டுடன், குறித்த 3 கேள்விகளையும் நீக்கி இறுதிப் புள்ளிகளை வழங்கப் பரீட்சை திணைக்களம் செப்டெம்பர் 17 தீர்மானித்தது. ஆனால், பரீட்சைஎழுதிய பிள்ளைகளின் பெற்றோர்கள் இதனை எதிர்க்கின்றனர்.

இந்த முடிவுக்கு எதிராகப் புதன்கிழமை காலை பரீட்சை திணைக்களத்திற்கு முன்பாக பெற்றோர்கள் குழுவொன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது, பதற்றமான சூழ்நிலையைக் கட்டுப்படுத்த கலகத் தடுப்புப் பிரிவை வரவழைக்கவேண்டியிருந்தது. பின்னர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் ஆறு பெற்றோர்கள் பரீட்சை ஆணையாளருடன் கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

அதன் பின்னர் கருத்து தெரிவித்த ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்துவது அவசியமானால் அதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்றார்.

இதேவேளை, பெற்றோர்கள் குழு ஒன்று இந்த முறைகேடு தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்திருக்கின்றனர். பரீட்சை மீள நடத்தப்படவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதற்கிடையே, புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் கசிந்த விவகாரத்துடன் தொடர்புடைய மூவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று வடமத்திய மாகாணக் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

அனுராதபுரம் இரத்மலை திஸ்ஸ கல்லூரியின் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை நிலையத்தில் பணிபுரிந்த மண்டபத் தலைவர் உட்பட மூவரின் சேவையை இடைநிறுத்தநடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாக வடமத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.டபிள்யூ சமரக்கோன் நேற்றுத் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக மண்டபத் தலைவர் உள்ளிட்ட மூவரிடமும் மாகாணக் கல்வித் திணைக்களம் வாக்குமூலம் பதிவுசெய்திருந்தது.

பரீட்சை நிலையத்தில் இருந்த உதவி அதிபர் ஒருவராலேயே புலமைப்பரிசில் தனியார் வகுப்பெடுக்கும் ஆசிரியர் குழுவிற்கு புலனம் (வட்ஸ்அப்) மூலம் வினாத்தாள் பகிரப்பட்டதாக தொடக்க விசாரணைகளில் இருந்து தெரியவந்திருக்கிறது.

இதன் அடிப்படையிலேயே, அந்த பரீட்சை மண்டபத்தில் பணிபுரிந்த பரீட்சை நிலையத் தலைவர், உதவித் தலைவர் மற்றும் ஆசிரியர் ஒருவரின் சேவை இடைநிறுத்தப்பட்டு அவர்கள் மீது மேலதிக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

# 24 மணி நேர காலத்தினுள் விபத்துக்களில் 6 பேர் சாவு

பல்வேறு இடங்களிலும் 24 மணித்தியாலத்திற்குள் இடம்பெற்ற வாகன விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். அம்பாறையில் காரைதீவு, கிளிநொச்சி, வெயாங்கொடை, கட்டுகஸ்தோட்டை, வவுனியாவில் ஓமந்தை ஆகிய இடங்களில் இடம்பெற்ற இந்த விபத்துக்களில் 14 வயதுச் சிறுமி ஒருவரும் உயிரிழந்துள்ளார். மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் பிரிவிலுள்ள மாவடிப்பள்ளியில் இருந்து சம்மாந்துறை நோக்கி பயணித்த தனியார் பேருந்து ஒன்றும் மோட்டார் சைக்கிளும் மோதியவிபத்தில்14வயதுசிறுமிஉயிரிழந்தார். பேருந்து சாரதி காயமடைந்தார்.

கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சி செல்லும் வீதியில் பன்னாங்கண்டி பாலத்திற்கு அருகாமையில் நேற்று அதிகாலை வீதியால் சென்று கொண்டிருந்த இளைஞன் மீது டிப்பர் வாகனம் மோதியதில் இளைஞன் உயிரிழந்தார்.

வவுனியா, ஓமந்தை பொலிஸ் பிரிவிலுள்ள பன்றிக்கெய்தகுளம் பகுதியில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் துவிச்சக்கரவண்டி ஒன்றுடன் மோதியதில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மினுவாங்கொடையில் பெண் ஒருவர் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த பெண் மினுவாங்கொடை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது உயிரிழந்தார்.

கண்டி--யாழ்ப்பாணம் வீதியில் பாதசாரி ஒருவர் மீது கார் மோதிய விபத்தில் 71 வயதுடைய முதியவர் உயிரிழந்தார்.

இந்நிலையில், இவ்விபத்துடன் சம்பந்தப்பட்ட வாகனச்சாரதிகளை அந்தந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பொலிஸார் கைது செய்துவிசாரணைகளைநடத்திவருகின்றனர்.

# பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் ஆராய்வு

தேசிய பாதுகாப்புச் சபை நேற்றுக் காலை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் கூடியது. 2024 ஜனாதிபதித் தேர்தலை சுதந்திரமாகவும்நியாயமாகவும்நடத்துவதற்கு அவசியமான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது.

நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுதல், வேட்பாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல், வாக்குச் சாவடிகள் மற்றும் வாக்கு எண்ணும் நிலையங்களை அண்டிய பகுதிகளில் பாதுகாப்பை பலப்படுத்துதல் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவுக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல் என்பன குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது.

அத்துடன், தேர்தலுக்குப் பின்னரான காலப்பகுதியில் மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படாத வகையில் நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு தேவையானஅனைத்துநடவடிக்கைகளையும் எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாதுகாப்புத் தரப்புப் பிரதானிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

# 108 பேர் கைது

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட 108 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான நிஹால் தல்துவ தெரிவித்தார்.

ஜனாதிபதித்தேர்தல்தொடர்பில்சட்டவிரோத நடவடிக்கைகளுக்குப்பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் 14 வாகனங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

செப்டெம்பர் 21நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் பொலிஸாருக்கு 464 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அவற்றில், வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 48 முறைப்பாடுகளும் தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் 316 முறைப்பாடுகளும் அடங்குகின்றன.

மேலும், நாடளாவிய ரீதியில் சட்டவிரோதமாக ஒட்டப்பட்ட 66 லட்சத்து 62 ஆயிரத்து 676 சுவரொட்டிகள் பொலிஸரால் நீக்கப்பட்டுள்ளன. 2 லட்சத்து 19 ஆயிரத்து 203 சுவரொட்டிகள் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட 1,609 பேனர்கள் பொலிஸரால் நீக்கப்பட்டுள்ளதுடன் 1,176 பேனர்கள் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன

## படுக்கையிலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதன்கிழமை வேலை முடிந்து தங்கும் இடத்திற்குச்சென்றுதூங்கியஇவர், நள்ளிரவில் தான் தூங்கி கொண்டிருந்த கட்டிலில் இருந்து தவறி விழுந்ததில் அடிபட்டுப் பரிதாபமாக உயிரிழந்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

ஆபத்தான நிலையில் அவரை யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்க உடனடிருந்தவர்கள்நடவடிக்கைஎடுத்தபோதும் அவர் வைத்தியசாலைக்கு எடுத்து வரும் வழியில் அவர் உயிரிழந்திருந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

படுக்கையில் இருந்து கீழே விழுந்த அதிர்ச்சியில் ஏற்பட்ட மாரடைப்பு காரணமாக அவர்உயிரிழந்திருக்கலாம்எனவும்பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

## அனைவரும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலுக்கான சகல பணிகளும் முழுமைப்படுத்தப்பட்டுள்ளன. தேர்தல் பணிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் கட்டாயம் சேவையில் ஈடுபடவேண்டும். கடமைக்குச் சமூகமளிக் காவிடின் தாபன விதிக்கோவைக்கமைய அது ஒரு குற்றமாகக் கருதப்படும்.

ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு வெளியானவுடன் ஊடக நெறிக்கோவையை வெளியிட்டோம். அனைத்து ஊடகங்களும் முறையாகச் செயற்பட்டுள்ளன. ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வெளியிடல் மற்றும் சட்டம் ஒழுங்கை பாதுகாத்தல் ஆகியவற்றுக்குஊடகங்களின்ஒத்துழைப்பை தொடர்ந்து எதிர்பார்க்கிறோம்.

அரசசேவையிலும், தனியார்துறையிலும் பணி புரிபவர்களுக்கு சம்பளம் இல்லாது சொந்த விடுமுறை இரத்தாகாத வகையில் விடுமுறைவழங்குவது குறித்து 2024.09.04 அன்று அறிவித்திருந்தோம்.

ஜனாதிபதித் தேர்தல்வாக்கெடுப்பின்போது அரச பல்கலைக்கழகங்களின் பணியாட்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# தேர்தல் வாக்களிப்பு நிலைய எல்லைக்குள் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள தடை

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தல் தினத்தன்று வாக்களிப்பு நிலைய எல்லைக்குள் சில நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தடைசெய்து தேர்தல் ஆணைக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

தேர்தல் வாக்களிப்பு நிலைய எல்லைக்குள் அல்லது அந்த வாக்கெடுப்பு நிலையத்திற்குள் பிரவேசிக்கும் வாயிலில் இருந்து அரை கிலோ மீற்றர் தூரத்திற்குள் சில நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவால் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் தடை செய்யப்பட்டுள்ள செயல்களை செய்பவர்கள் தண்டனைக்குள்ளாகலாம் என்றும் தேர்தல் ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவால் தடை செய்யப்பட்டுள்ள நடவடிக்கைகள்:

1. வாக்களிக்குமாறு இரந்து கேட்டல்
2. எவரேனும் தேருநரின் வாக்கைப் பரிந்து கேட்டல்
3. குறிப்பிட்ட எவரேனும் வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டாமென்று எவரேனும் நேருநரை தூண்டி வசப்படுத்த முயலுதல்
4. தேர்தலில் வாக்களிக்க வேண்டாமென்று நேருநரை தூண்டி வசப்படுத்த முயலுதல்
5. தேர்தல் தொடர்பான, (யாதேனும் அலுவலக முறையிலான துண்டுப் பிரசுரம், ஒட்டு விளம்பரம், சுவரொட்டி, புகைப்படம், சித்திரம் அல்லது அறிவித்தல் எதனையும் தவிர்ந்த) யாதேனும் நுண்டுப் பிரசுரம், ஒட்டு விளம்பரம், சுவரொட்டி, புகைப்படம் அல்லது சித்திரம் அல்லது அறிவித்தல் அல்லது எவரேனும் வேட்பாளருக்கு குறித்தொதுக்கப்பட்ட சின்னம் எதனையும் விநியோகித்தல் அல்லது காட்சிக்கு வைத்தல்.

போன்ற செயல்களில் ஈடுபட்டால் தண்டனைக்குரிய குற்றமென தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

(05)

## வாக்காளர் அட்டைகளின் மாதிரியை இணையத்தில் பெற்றுக்கொள்ளாம்

### தேர்தல் ஆணைக்குழு

ஜனாதிபதித் தேர்தலுக்கு வாக்காளர் அட்டைகளை சரிபார்க்கவும், வாக்காளர் அட்டை மாதிரியைப் பெற்றுக்கொள்ளவும் இணையவழி முறையை தேர்தல் ஆணைக்குழு அறிமுகப்படுத்தியுள்ளது.

அதற்கிணங்க, வாக்களர் அட்டைகளை தேருநர் பதிவு விவரம் தேடல் சரிபார்க்கலாம்.

வாக்களிப்பதற்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையை இதுவரை பெறாத வாக்காளர்கள் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி குறிப்பிட்ட வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்கலாம்.

வாக்காளர்களுக்கு வாக்காளர் அட்டை கிடைக்காவிடில் அருகில் உள்ள தபால் நிலையங்களை அணுகி விநியோகிக்காமல் இருக்கும் வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள் அல்லது இனையத்தளத்திற்குள் உட்பிரவேசித்து தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்தி வாக்காளர் அட்டை மாதிரியைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (05)



## ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை பொதுவெளியில் திரையிடத் தடை

### பொலிஸ் தரப்பு அறிவிப்பு

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை பொது வெளியில் திரையிடுவது தடை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வியாழக்கிழமை இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ உரையாற்றுக்கையில் -

தேர்தல் முடிவுகளை பொது வெளியில் திரையிடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பொது வெளியில் திரையிடுவதால் வன்முறைச் சம்பவங்கள் ஏற்படலாம். எனவே, வன்முறைகளைத் தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் முடிவுகளை பொதுமக்கள் தங்களது வீடுகளில் இருந்தவாறு தனிப்பட்ட முறையில் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். - என்றார்.(05)

## மட்டக்களப்பு மாவட்ட வாக்கெண்ணும் நிலைய முன்னாயத்த பணிகள் துரிதம்



ஜனாதிபதி தேர்தலுக்கான மட்டக்களப்பு மாவட்ட வாக்கெண்ணும் நிலையமாக மட்டக்களப்பு இந்து கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் 9 ஆவது ஜனாதிபதி தேர்தல் நாளை (சனிக்கிழமை) நடைபெறவுள்ள நிலையில், மட்டக்களப்பில் வாக்கெண்ணும் நிலையமாக தெரிவுசெய்யப்பட்ட கல்லூரியில் வாக்குகளை எண்ணுவதற்கான அறைகள் உட்பட நிலைய தயார்ப்படுத்தல் நடவடிக்கைகள் மிகவும் துரிதமாக இடம்பெற்றுவருவதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியுமான ஜே.ஜே. முரளிதரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு இந்து கல்லூரியில் ஜனாதிபதி தேர்தல் வாக்குகளை எண்ணுவதற்கான தயார்ப்படுத்தல் பணிகளில் பொலிஸ் திணைக்களம், இலங்கை மின்சார சபை, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, சுகாதார திணைக்களம், சமூக சேவை திணைக்களம், மாவட்ட செயலகம், தேர்தல் திணைக்களம் உட்பட பல்வேறு திணைக்களங்கள் ஈடுபட்டுள்ளன. மாவட்டத்தில் நான்கு லட்சத்து 49 ஆயிரத்து 686 வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

கல்குடா, மட்டக் களப்பு, பட்டிருப்பு ஆகிய தொகுதிகளில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெற வுள்ளன.

மட்டக்களப்பு தேர்தல் தொகுதியில் 210,293 வாக்காளர்களும் கல்குடா தேர்தல் தொகுதியில் 1,34,104 வாக்காளர்களும் பட்டிருப்பு தொகுதியில் 105,289 வாக்காளர்களும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். (05)

## சவூதி அரேபிய அமைச்சருடன் இலங்கை தூதர் சந்தித்து பேச்சு

### சவூதி அரேபியாவுக்கான இலங்கை தூதர் அந்நாட்டின் போக்குவரத்து, விநியோக அமைச்சருடன் சந்திப்பு



சவூதி அரேபியாவுக்கான இலங்கை தூதுவர் உமர் லெப்பை அமீர் அஜ்வத் சவூதி அரேபியாவின் போக்குவரத்து மற்றும் விநியோகச் சேவைகள் அமைச்சர் பொறி. ஸாலிஹ் பின் நாஸர் அல் ஜாஸிரை கடந்த 12ஆம் திகதி சந்தித்து இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது தூதுவர் அமீர் அஜ்வத்தை வரவேற்ற அமைச்சர் ஸாலிஹ் அல் ஜாஸிர் இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பில் பல்வேறு வகைகளிலும் வலியுறுத்தினார்.

இதன்போது கருத்துரைத்த தூதுவர் அமீர் அஜ்வத் சவூதி அரேபிய பிரஜைகளுக்கு இலவச விசா வழங்க இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட முடிவானது இரு நாட்டு மக்களுக்கும் இடையிலான தொடர்புகளை மேம்படுத்துவதற்கான ஒரு சிறந்த சந்தர்ப்பமாகும் என்பதை வலியுறுத்தியதுடன், இலங்கைக்கான சவூதி எயார்லைன்ஸின் சேவைகளை மீளவும் ஆரம்பிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

மேலும் இதன்போது இலங்கையின் தேசிய விமான சேவையான ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் இரு நாடுகளுக்கும் இடையிலான தினசரி சேவைகளை மேற்கொள்வதற்கு சிவில் விமான போக்குவரத்துக்கான பொது அதிகார சபை வழங்கி வருகின்ற தாராளமான ஆதரவுக்கும் தூதுவர் தனது பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

அத்துடன் இரு நாடுகளுக்கும் இடையிலான வான்வழி மற்றும் கடல்வழித் தொடர்புகளை மேம்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்தும் இக்கலந்துரையாடலின்போது ஆராயப்பட்டது.

அமைச்சர் ஸாலிஹ் தற்போதும் பல கவுன்சில்கள் மற்றும் குழுக்களுக்கு தலைமை தாங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அந்த வகையில் அவர் சிவில் விமான போக்குவரத்துக்கான பொது அதிகார சபை, சவூதி எயார்லைன்ஸ் , பொதுப் போக்குவரத்து அதிகார சபை, சவூதி துறைமுக அதிகார சபை மற்றும் சவூதி ரயில்வே கம்பெனி போன்ற பல்வேறு நிறுவனங்களின் தலைவராக பணியாற்றுவதுடன் கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் விநியோகத் திட்டக் குழுவின் துணைத் தலைவராகவும் பணியாற்றி வருகின்றார்.

இந்நிகழ்வின்போது தூதுவர் அவர்களுடன் இலங்கை தூதரகத்தின் அமைச்சர் ஃ தூதரகப் பிரதானி மொஹமட் அனஸும் கலந்துகொண்டார். (05)

## ஐஸ் போதைப்பொருளுடன் மூவர் சுற்றிவளைப்புக்களில் கைதாகினர்

நாடளாவிய ரீதியில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஐஸ் போதைப்பொருளுடன் மூன்று சந்தேக நபர்கள் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி, ராகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உக்கஸ்ஹேன பகுதியில் 15 கிராம் 460 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் ராகம பகுதியை சேர்ந்த 32 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், தெமட்டகொடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 15 கிராம் 330 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெமட்டகொடை பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, பொரள்ளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சஹஸ்புர பகுதியில் 12 கிராம் 820 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுள் மற்றும் போதைப்பொருள் விற்பனை மூலம் கிடைக்கப்பெற்ற 272,000 ரூபா பணத்தொகையுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொரள்ளை பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நியாயமற்ற அணுகுமுறை

2024 அரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடும் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தான் அதிகாரத்தில் இருப்பதை ஒரு வரப்பிரசாதமாகப் பயன்படுத்துகின்றார் என்கிற குற்றச்சாட்டின் மீது தேர்தல் ஆணைக்குழு அதிகம் அக்கறை செலுத்தவேண்டியுள்ளது. ஆளும்தரப்பில் இருப்பதைத் தனக்குச் சாதகமாக அவர் பயன்படுத்துவது நியாயமற்றது. மற்றைய வேட்பாளர்களிலும் பார்க்க இவருக்குச் சாதகமான தன்மையை ஏற்படுத்தக்கூடியது.

ஆளும்தரப்பின் இத்தகைய செயற்பாடுகளுக்கான மிக அண்மைய உதாரணமாக தனியார் கடன்மறுசிரமைப்புத் தொடர்பான ஆளும்தரப்பின் அறிவிப்புச் சுட்டிக்காட்டப்படுகின்றது. ஏற்கனவே அரச பணியாளர்களுக்கு 2015 தை மாதம் முதல் சம்பள அதிகரிப்பு வழங்குவதற்கு அமைச்சரவை முடிவு செய்துள்ளது என்கிற அறிவிப்பும் இதேபோன்று சர்ச்சைக்குள்ளாகியுள்ளது.

தனியார் கடன்மறுசீரமைப்பு விடயத்தில் நேற்றையதினம் 3.3 பில்லியன் அமெரிக்க டொலர் கடனை மறுசீரமைப்பதற்கான இணக்கப்பாடே எட்டப்பட்டிருந்தது. ஆனால், இதற்கு முன்னரே இணக்கம் எட்டப்பட்டிருந்த தொகையையும் சேர்த்து 17.5 பில்லியன் டொலர் கடன் மறுசீரமைப்புக்கு இணக்கம் என்ற வகையில் அரச தரப்பு அறிவித்தது. இது குறித்து எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தேர்தல் ஆணைக்குழுவிடம் முறையிட்டுமுள்ளது.

தனியார் கடன்மறுசீரமைப்புத் தொடர்பில் ஆளும்தரப்பு நேற்று வெளியிட்ட அறிவிப்பு வாக்காளர்களைக் கவர்வதற்கான முயற்சி என்று அது குற்றஞ்சாட்டியுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் சட்டத்தரணிகள் கூட்டமைப்பு உறுப்பினரான ஷியான் புஞ்சிஹேவா, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சமன் ரத்நாயக்கவுக்கு இது தொடர்பில் கடிதம் எழுதியிருக்கிறார். வெளிநாட்டு வர்த்தகக் கடன் வழங்குநர்களுடனான ஒப்பந்தம் தொடர்பாக ஆளும் தரப்பு வெளியிட்டுள்ள அறிக்கை வாக்காளர்களை பாதிக்கும் முயற்சியாகும் என்று அதில் சுட்டிக்காட்டியுள்ளார். இது தொடர்பில் ஊடகங்கள் செய்தி வெளியிடுவதைத் தவிர்க்குமாறு தேர்தல் ஆணைக்குழுவிடம் சட்டத்தரணி ஷியான் புஞ்சிஹேவா வலியுறுத்தியுள்ளார். ஆனால் ஊடகங்கள் ஏற்கனவே செய்தியை வெளியிட்டு முடித்துவிட்டன.

தெற்கில் இது என்றால், வடக்கில் திடீரென நேற்று நெடுந்தீவுக்கான வடதாரகைக் கப்பல் மீண்டும் பணிக்குத் திருப்பப்படுகின்றது. 3 கோடி ரூபாயில் என்று தொடங்கி 5 கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகைக்குத் திருத்தப்பட்ட வடதாரகை பயணிகளின் போக்குவரத்துக்காக திடீரென வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது. சுமார் ஒரு வருடத்திற்கும் மேலான காலமாக சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த இந்தக் கப்பல் அரசுத் தலைவர் தேர்தலுக்கு இரு நாள்கள் முன்பாக சேவைக்குத் திருப்பப்பட்டுள்ளது.

இதுபோன்றே வடக்கு மாகாணத்தில் சுதந்திர வர்த்தக வலயங்களை ஏற்படுத்துவதற்கான இடங்களுக்குப் பெயரிடும் நிகழ்வும் தேர்தல் பரப்புரைக் காலத்தில் இடம்பெற்றது. அவசர அவசரமாக மாங்குளத்திலும் காங்கேசன்துறையிலும் பெயர்ப் பலகைகளைத் திறக்கவேண்டிய தேவை எதுவும் ஆளும்தரப்புக்கு இருக்கவில்லை. அப்படியிருந்தும் அரசுத் தலைவரின் செல்வாக்கை அதிகரிப்பதற்கு உதவும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவே கொள்ளப்படுகிறது.

இப்படி, தனக்குச் சார்பான ஆளும்தரப்பு அதிகாரத்தில் இருப்பதை இந்தத் தேர்தலில் தனக்குச் சாதகமாக –முடிந்த வழிகளில் எல்லாம் பயன்படுத்துவதில் அரசுத் தலைவர் குறியாகவே இருக்கின்றார். இது நேர்மையான, நியாயமான அணுகுமுறையல்ல. மக்கள் பணத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளப் பார்க்கும் ஒரு மோசடி. இது அனுமதிக்கப்படக்கூடாது. இம்முறை இல்லாவிட்டாலும் எதிர்காலத் தேர்தல்களில் என்றாலும் இதுபோன்ற நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த தேர்தல் ஆணைக்குழு முயற்சிகளை எடுக்கவேண்டும்.

# விடை தேடும் கேள்விகள்



என் சத்திய மூர்த்தி

நாளை, செப்டம்பர் 21, சனிக்கிழமை, நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் யார் வெற்றிபெற்றாலும், எதிர்காலம் முழுமைக்கும் இந்த தேர்தலே பேசுபொருளாக இருக்கும். அந்த விதத்தில், ஒட்டுமொத்தமாக நாட்டு மக்களின் மனதில் இருந்து, 2022 அரகலயா போராட்டத்தைக்கூட நாளைய தேர்தல் பின் தள்ளிவிடும். சொல்லப்போனால், இந்தத் தேர்தல் குறித்து எதிர்காலத்தில் பேசும்போது, அது அரகலயா போராட்டத்தில் தொடங்கும். ஆனால், அரகலயா அங்கேயே நின்றுவிடும்.

இன்றைய தேர்தல் கணக்குகளின்படி, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்ற எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசா, மக்கள் விடுதலை முன்னணி தலைமைத்துவம் நல்கும் தேசிய மக்கள் சக்தியின் அனுர குமார திசநாயக்கே ஆகிய மூவரும் முக்கிய வேட்பாளர்கள். புத்திரிகை தர்மத்தின் அடிப்படையில் மட்டும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மகன் நாமல் அவ்வப்போது, செய்திகளில் அடிபடுகிறார். மற்றபடி, முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா, முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சே போன்றோரும் தேர்தல் களத்தில் இருந்து காணாமலே போய்விட்டார்கள்.

முன்னணியில் மூன்று வேட்பாளர்களின் பெயர் முழுங்கினாலும், போட்டி என்னவோ அனுர மற்றும் சஜித் ஆகிய இருவருக்கும் இடையில் மட்டுமே என்ற ஒரு கருத்து பெருவாரியாக இருக்கிறது. அவர்களில் ஒருவருக்கு அவசியமான ஐம்பது சதவீத வாக்குகள் கிடைக்காமல் ரணில் வாக்குகளை பிரித்துவிடுவார் என்ற அளவிலேயே தேர்தலில் அவரது பங்கும் பங்களிப்பும் இருக்கப்போகிறது என்பதே இந்தத் தரப்பினரின் கருத்து.

நாடு தழுவிய வாக்காளர்களில் 30 முதல் 40 சதவீதம் வரை முதலிலேயே முடிவெடுக்காத, முடிவெடுக்கத் தெரியாத 'ஸ்விங் வோட்டர்ஸ்' என்று ஆங்கிலத்தில் அறியப்படும் 'ஊசலாடும் வாக்காளர்கள்' என்று கருதப்படுகிறது. கடந்த காலங்களை வைத்து பார்க்கும்போது, அது உண்மை என்றே தோன்றுகிறது. 'சைலண்ட் மெஜாரிட்டி' என்று அறியப்படும் இந்த அமைதி-பெரும்பான்மை வாக்காளர்களே அடுத்தடுத்த தேர்தல்களின் முடிவை தீர்மானித்திருக்கிறார்கள்.

### நாட்டுபுற அரசியல்

2005 தொடங்கி, அண்மையில் 2019 வரை, குறிப்பாக தென்னிலங்கையில் அந்த வாக்காளர்கள், மஹிந்தராஜபக்சவுடன் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அதற்கு 'பேரினவாதம்' மட்டுமே காராணம் என்று யாராவது கருதினால், அது அன்றும் தவறு. இன்றும் தவறு. தலைநகர் கொழும்பு சார்ந்த நகர்புற மத்தியதர வாக்காளர்களை மட்டுமே சுற்றியிருந்த தேசிய அரசியலை, மஹிந்த கிராமப் புறத்திற்குக் கொண்டு சென்று, அதனைத் தனதாக்கிக் கொண்டார்.

மஹிந்தவின் ஆதரவாளர்களில் பேரினவாதிகள் ஒரு முக்கிய அங்கம் வகித்தார்கள். இன்னும் சொல்லப்போனால், சைலண்ட் மெஜரிட்டியை போல் இல்லாமல், வழக்கமாகவே, பேரினவாதிகளின் குரல் எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கும். தங்களது காய் நகர்த்தல்களை அவர்கள் ஆர்ப்பாட்டமாக, ஆர்ப்பரிப்புடன் செய்வார்கள். ஆனால், எண்ணிக்கையில் என்னவோ, அவர்கள் குறைவு. இதுதானே, இங்கே, தமிழர்கள் மத்தியிலும், அவ்வப்போது அரங்கேறும் மிதவாதி-அதிவாதி அல்லது தீவிரவாதி 'தேசிய' பிரகடனங்கள்.

மஹிந்தவின் முகத்தை நாடு அறிவதற்கு எழுபது ஆண்டுகளுக்கு முன்னரே, நகர்புறம் மற்றும் கிராமபுற சிங்கள மக்களிடையேயான அரசியல் போட்டி, சுதந்திர கட்சியும், அதற்கு முன்னரே பல்வேறு கம்யூனிஸ்ட் கட்சிகளும் தோன்றுவதற்கு காரணமாக இருந்தது. என்ன, இங்குள்ள கம்யூனிஸ்;ட்டுகள் தொடர்ந்து அன்றைய உருசியா, பின்னர் சோவியத் யூனியன் தேர்தல்களில் போட்டியிடுவது போல நடந்து கொண்டமையால், மண்ணோடும் மக்களோடும் தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட சுதந்திர கட்சி முன்னிலை பெறமுடிந்தது.

சுதந்திர கட்சியை தோற்றுவித்தவர்களுக்கு இருந்த பொறுமை, அவர்கள் சார்ந்த இடதுசாரி அணியில் அங்கத்துவம் வகித்த இளைஞர்களிடையே இருக்கவில்லை. அவ்வாறு தொடங்கப்பட்டதுதான், ஜேவிபி என்று அறியப்படும் மக்கள் விடுதலை முன்னணி. இதே காலகட்டத்தில்தான், தமிழர்களிடையே, அடிமட்ட மக்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்திய தமிழ் அரசு கட்சி தோன்றியது. இதே காலகட்டத்தில்தான், தந்தை செல்வாவின் மிதவாத அரசியலை புரிந்துகொள்ளும் மனப்பக்குவம் இல்லாத தமிழ் இளைஞர்களும் போராளிக் குழுக்களை அமைத்து செயல்பட துவங்கினார்கள்.

### கருத்தியல் உண்மை

இன்று, ஐம்பது ஆண்டுகள் உருண்டோடிவிட்ட காலகட்டத்தில், இரண்டு கிளர்ச்சி போராட்டங்களைக் கடந்து, அதில் தங்கள் தலைவர் ரோஹண்ண விஜயவீரா உள்ளிட்ட ஆயிரக்கணக்கான போராளிகளை இழந்துவிட்டு, மக்கள் விடுதலை முன்னணி தனது பழைய ஆதரவுத் தளத்தை மீண்டும் கைபற்றி இருக்கிறது என்றே தோன்றுகிறது. அதிலும் குறிப்பாக, இடைப்பட்ட காலத்தில், தங்களிடம் இருந்து விலகி சென்ற அந்த ஆதரவாளர்களை மஹிந்தவின் அரவணைப்பில் இருந்து மீட்டு எடுத்திருக்கிறது.

அவ்வாறு நிகழ்வதற்கு, முந்தைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் தவறுதலான ஆட்சி முறை மிகவும் உதவியது. அந்த ஆதரவாளர்கள், மக்கள் விடுதலை முன்னணியை நோக்கி மீண்டும் திரும்புவதற்கு நாடு தழுவிய அரகலயா போராட்டம் ஒரு வாய்ப்பாக, வடிகாலாக அமைந்தது. தலைமைகள், தலைவர்கள் என்ற வட்டத்திற்குள் சிக்கிக்கொள்ளாமல் கடந்த ஐந்து வருட அரசியலை நோக்கினால், இந்த கருத்தியல் உண்மை புரியும்.

அந்த விதத்தில் தற்போதைய ஜனாதிபதித் தேர்தல், உணர்த்துவது எல்லாம் ஓரிரு விடயங்கள்தான். ஒன்று, நாடு சுதந்திரம் அடைந்த காலகட்டத்தில் இருந்து இன்றுவரை, கிராமப்புற மக்கள், மற்றும் ஏழை மக்களின் சமூக -பொருளாதார நிலைமை சீராகவில்லை. இன்னும் சொல்லப்போனால், தசாப்தங்களாகத் தொடர்ந்துவரும் பொருளாதாரச் சீர்கேடுகள் முற்றி, அரகலயா போராட்டமாக வெடித்த பின்னர், அதுவரை மத்தியதர வர்க்கம் என்ற பாதுகாப்பில் உழன்று கொண்டிருந்த நகர்புற மக்களின் பொருளாதார நிலையும் நிலைகுலைந்து அல்லாடுகிறது.

இந்த பிரச்சினையைதான், இரண்டு தேசிய கிளர்ச்சிகளில் தனது தலைமையையும் போராளி படையினரையும் இழந்துவிட்டு ஜனநாயக பாதையில் முன்னேறியிருக்கும் மக்கள் விடுதலை முன்னணி, உணர்ந்திருக்கிறது. அதிலும் குறிப்பாக, இராணுவத்தினரால் முற்றிலும் அழிக்கப்பட்டுவிட்டது என்று கருதப்பட்ட அந்தக் கட்சி, புத்துயிர் பெற்று மூன்று தசாப்தங்களாகத் தனது அடையாளத்தை முற்றிலும் தொலைத்து விடாமல், மூன்று சதவீத

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# விடை தேடும் கேள்விகள்

4ம் பக்க தொடர்ச்சி...........

வாக்காளர்களுடன் உயிரோட்டமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆனால், ஜேவிபி குறித்து பேசும் போதெல்லாம், அவர்கள் கட்டவிழ்த்துவிட்ட வன்முறையும் தொடர்ந்து தலைகாட்டி வந்திருக்கிறது. எப்படி இனப்பிரச்சினை குறித்து பேசும்போது, அது எப்படியோ, விடுதலைபுலிகள் அமைப்பின் தீவிரவாதத்தில் முடிவது போல். எனவே தான், தனது கடைசி நாள் தேர்தல் பரப்புரையில்கூட அனுர, தாங்கள் பழைய ஜேவிபி அல்ல. மாறாக, என்பிபி என்று அறியப்படும் தேசிய மக்கள் சக்தி என்று அழுத்திச்சொல்கிறார். ஆனால், அவருடைய இந்த உறுதிமொழி மட்டும் மக்களை சென்றடைந்ததாக தெரியவில்லை.

### கூட்டி கழித்து பார்த்தால்

இந்த பின்னணியில், தற்போதைய தேர்தல் கடந்த 1956-நாடாளுமன்றத் தேர்தலை பிரதிபலிக்கிறது எனலாம். அன்று மேல்நாட்டு வலதுசாரி பொருளாதாரம் மற்றும் அரசியல் கொள்கைகளை முன்னிறுத்தி தேர்தலை சந்தித்த ஐக்கிய தேசிய கட்சி, தற்போது இரண்டாக உடைந்துள்ளது. அதனை எதிர்த்து நின்ற இடதுசாரிகள், பல்வேறு உருமாற்றம் கொண்டு, தற்போதைய மக்கள் விடுதலை முன்னணியாகவும், ராஜபக்சாக்களின் மொட்டு கட்சியாகவும், மூன்றாக பிளவுபட்டுள்ள மிச்சம் மீதியுள்ள சுதந்திர கட்சியாகவும் உருவெடுத்துள்ளது. ரஜினிகாந்தின் 'அண்ணாமலை' திரைப்படத்தில், ராதா ரவி கூறுவது போல், 'கூட்டி கழித்துப் பார்த்தால், எல்லாம் சரியாக இருக்கும்'.

இதன் காரணமாகவே, தற்போதைய தேர்தல், தலைமைகளையும் தலைவர்களையும் மற்றுமே முன்னிறுத்தாமல், அடிப்படை அணுகுமுறைகள் குறித்த ஒன்றாக உருவெடுத்துள்ளது. அதுவே, மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் கீழ் 'சிஸ்டம்ஸ் சேஞ்ச்' எனப்படும் ஆட்சியாளர்களின் அணுகுமுறைகளில் பெரும் மாற்றங்களை தோற்றுவிக்குமா, என்பதையே இந்தத் தேர்தல் முடிவு செய்யும்.

ஒருபுறம் 'மாற்றம்' கோரும், மாற்றத்திற்கான மக்கள் விடுதலை முன்னணி. மறுபுறம் இது காலம் வரை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களது எதிர்பார்ப்புகளையும், ஏன் அடிப்படைத் தேவைகளையும்கூட இன்றளவும் பூர்த்தி செய்யாத, பூர்த்தி செய்ய முயலாத அல்லது பூர்த்தி செய்ய முடியாத, பழைய மொந்தையில் புளித்துப்போய் இருக்கும் அரதபழசான கள். அந்தக் கள், தற்போது இரண்டு போத்தல்களில் விநியோகிக்கப்படுகிறது, என்பதே அனுர திசநாயக்காவின் தரப்பு வாதம்.

இந்த சூழ்நிலையில் மக்கள் இன்னமும் மாற்றத்திற்கு தயாராகவில்லை என்பது போல் ரணில் விக்கிரமசிங்கே, 'ஸ்விங் வோட்டர்ஸ்' தனக்குத்தான் கடைசி நிமிடத்தில் வாக்களிப்பார்கள் என்று உறுதியாக நம்புகிறார். இல்லை, இல்லை, மக்கள் ஜேவிபி போன்றோரின் கடந்த காலத்திய வன்முறை அடிப்படையிலான மாற்றங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், அவர்கள் ரணில் தலைமையை மாற்றுவதற்கே துடிக்கிறார்கள் என்பது சஜித் தரப்பின் வாதம், எதிர்பார்ப்பு.

ஜேவிபி தரப்பினரின் வன்முறை என்பது தற்போது மனத்தளவில் சுருங்கி விட்டது, அல்லது வியாபித்து இருக்கிறது. என்றாலும், அதில் அவர்கள் உறுதியாகவும் கடும்போக்குடனம் தொடருகிறார்கள் என்பது மற்ற இரு தரப்பினரின் வாதமும்கூட. 'இல்லை, இல்லை. நாங்கள் மாறிவிட்டோம். எங்களிடம் ஆட்சி-அதிகாரத்தை அளித்து, அதனை நிரூபிப்பதற்கு எங்களுக்கு ஒரு வாய்ப்பு தாருங்கள்,' என்பது ஜேவிபி வாதத்தின் அடிநாதமாக இருக்கிறது.

எது எப்படியோ, இந்த தேர்தலில் எந்தவொரு வேட்பாளரும் ஐம்பது சதவீத முதல் சுற்று விருப்பு வாக்குகளை பெறமாட்டார்கள் என்று அரசியல் நோக்கர்கள் ஒரு சேர குரல் கொடுத்துள்ளனர். அந்த வகையில் தேர்ந்தெடுக்கப்படும் ஜனாதிபதி, நாட்டின் அனைத்து தரப்பினரின் தேர்வாக இருக்க முடியாது என்ற வாதம் இப்போதே கேட்க துவங்கி உள்ளது.

### இன்னொரு அரகலயா?

அது சரி, தற்போது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர் யாராக இருந்தாலும், அவரால் மக்களின் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்ய முடியாவிட்டால், அடுத்த கட்டம்தான் என்ன? இன்னொரு அரகலயாவா? அல்லது ஆட்சியாளர்கள் தங்களது தோல்விகளுக்கு, முந்தையவர்கள் போலவே அடுத்தவர்களைக் குறைகூறுவார்களா? அதற்குதான், ஜேவிபியைவிட வன்முறையும் வன்மமும் பேசும் முன்னணி சோஷலிச கட்சியினர் காத்துக் கொண்டிருக்கிறார்களா?

இவ்வாறு இப்போதே சிந்திப்பதற்கான காரணம் இருக்கிறது. முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு, ஜேவிபி- - என்பிபி கூட்டணியின் புதிய ஆதரவுத் தளம் ஒரு குழம்பிய கூட்டாக இருக்கிறது. ஒருபுறம், குறைந்த எண்ணிக்கையிலேயே உள்ள அடிப்படை ஆதரவுத் தளம். இவர்கள், இன்னமும் சோஷலிசம்பேசி, ஓரளவிற்கு வன்முறையை ஏற்றுக்கொள்ளும் பேரினவாதிகள்.

அவர்களோடு இப்போது சேர்ந்துள்ளதாகக் கருதப்படும் நடுநிலைவாதிகள் மற்றும் நகர்புற வாக்களர்கள், ஒரு விதத்தில் சுயநலவாதிகள். காரணம், இருபது ஆண்டுகளாக மஹிந்த ராஜபக்சவின் ஆதரவாளர்களாக இருந்த அவர்கள் ஒரே போடாக, அரகலயா போராட்டத்தில் குதித்தது இதனையே காட்டுகிறது. அடுத்த ஜனாதிபதி, அனுர திசநாயக்க உள்பட யாராக இருந்தாலும், அவர்கள் இந்த மக்களின் தேவைகளையும் ஆசைகளையும் பூர்த்தி செய்யாவிட்டால், அவரது கதியும் அதோ கதிதான்.

### சேனாதிராஜாவின் லூட்டி

முன்னணி சோஷலிச கட்சி குறித்துப் பேசும்போது, அவர்களுடைய ஜனாதிபதி வேட்பாளர் நுவன் போபகே குறித்து அறிந்துள்ளோமோ இல்லையோ, அதன் நிறுவனரான பிரேமகுமார் குணரத்தினத்தை மறந்துவிட்டு தமிழர்கள் சமகால அரசியல் பேசுவது தவறான போக்காகும். எப்போது தமிழர்கள் ஜனாதிபதி தேர்தலை முன்னிறுத்தி, அதிலும் குறிப்பாக ஒரு பொது வேட்பாளர் என்ற வட்டத்திற்குள் சுற்றி, முட்டி மோதுகிறார்களோ, அப்போதே அவர்கள், ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர், தங்களது உள்வீட்டு அழுக்குகளை வெளி உலகிற்கு தெரியும் படி இன்னமும் அலசப் போகிறார்கள் என்று அர்த்தம்.

இன்றைய சூழலில் தமிழர் அரசியல், அதிலும் குறிப்பாக தமிழ் அரசு கட்சியின் உள்வீட்டு குத்துகள் கேவலத்திற்கும் கீழாகிவிட்டது. சிறு பிள்ளை போல், கட்சி தலைவர் மாவை சேனாதிராசா அடிக்கும் லூட்டி, தமிழ் அரசுக் கட்சிக்கு மட்டுமல்ல, அனைத்துத் தமிழ் தரப்பினருக்கும் அவமானகரமான செயலாக உள்ளது. இன்னும் சொல்லப்போனால், தமிழ் பொது வேட்பாளர் என்ற கருத்தியல் இன்று தமிழ் அரசு கட்சியைச் சுற்றியே இருக்கிறது.

எப்போது, பொது வேட்பாளர் வெற்றியை எதிர்பார்த்து தேர்தலை சந்திக்கவில்லை என்று அரியநேத்திரனுக்கு கொம்பு சீவி விட்டவர்கள் கூறி விட்டார்களோ, அப்போதே, அவர்கள், முஸ்லீம் மற்றும் மலையக தமிழர் வாக்குகளைகூட கருத்தில் கொள்ளவில்லை என்பது உறுதியாயிற்று. ஏன், ஜனாதிபதித் தேர்தலில் மலையகத் தமிழ் வேட்பாளர் திலகராஜாவை போல், பிற பகுதிகளுக்கு அரியநேத்திரன் மறந்து போய்க்கூடச் சென்று வாக்குகள் கோரவில்லை. இல்லை என்று சொல்லாமல், கடைசி நாள் பரப்புரையின்போது, தலைநகர் கொழும்பிலும் அவர்கள் பொதுகூட்டம் நடத்தினார்கள் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

என்றாலும், குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டி வரும் அவருடைய தரப்பினரின் குறி எல்லாம், இப்போதும் பெயர் சொல்லும் அளவில் பிரபலமாக இருக்கும் மிதவாத தமிழ் அரசு கட்சியை இல்லாமல் ஆக்குவது என்றே தோன்றுகிறது. அந்த வகையில், அவர்கள் அனைவருமே ஒருவிதத்தில் விடுதலை புலிகள் அமைப்பின் கொள்கைகளையும் கோட்பாடுகளையுமே மனதில் நிறுத்தி, ஜனநாயக அரசியல் செய்வதாக தமிழ் மக்களை நம்ப வைக்க முயல்கிறார்கள்.

இந்த முயற்சியில் அவர்கள் வெற்றிபெற்றால், இன்றைக்கோ, எப்போதைக்கோ, விடுதலை புலிகள் அமைப்பாலும் சிதைக்க முடியாத தமிழ் மிதவாத அரசியல் காணாமல் போய்விடும். அந்த முயற்சியில் அவர்கள் ஓரளவு வெற்றி பெற்றாலும் நிலைமை இது தான்.

அந்த சூழ்நிலையில், விடுதலை புலிகள் அமைப்பாலே வெற்றிபெற முடியாத பாதையில் சமகால இளைஞர்கள் பயணிப்பார்களா, அல்லது, ஜேவிபி, அதனை தொடர்ந்து முன்னிலை சோஷலிச கட்சியின் அரசியல் பாதையை ஏற்றுக்கொள்வார்களா? இந்த கேள்விக்கான பதிலும், இந்த ஜனாதிபதி தேர்தலில் புதைந்துள்ளது. அதனைப் புரிந்துகொண்டு, இங்குள்ள தமிழர் அரசியல் செய்வதாகத் தெரியவில்லை!

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்

தொடர்புகளுக்கு: 0777 43 5557
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd


காலைக்கதிர் Kalaikkathir



# தெனியாய வீதியில் 3 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து

## ஒருவர் படுகாயம்

அக்குரஸ்ஸ - தெனியாய வீதியில் ஹூலங்தாவ பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று வீதியில் பயணித்த மற்றுமொரு பஸ்ஸை கடந்து முன்னோக்கி செல்ல முயன்ற போது எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் மற்றும் கார் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸின் சாரதியின் கவனக்குறைவே இந்த விபத்துக்கு காரணம் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தின் போது, மோட்டார் சைக்கிளின் சாரதி படுகாயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(05)

# 500 ஆடைதொழிற்சாலை பணியாளர்கள் திடீர் சுகவீனமுற்று வைத்தியசாலையில்

பொலன்னறுவை, பக்கமூன பிரதேசத்தில் உள்ள ஆடை தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் 500 பணியாளர்கள் திடீர் சுகவீனமுற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என பக்கமூன பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் வியாழக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

சுகவீனமுற்ற பணியாளர்கள் பக்கமூன பிரதேச வைத்தியசாலையிலும் அத்தனகடவல வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தபணியாளர்கள்உணவுஒவ்வாமைகாரணமாக இவ்வாறு சுகவீனமுற்றுள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சுகவீனமுற்றுள்ளபணியாளர்களில்உடல்நிலைமை கவலைக்கிடமாக இல்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

(05)

# கிருமிதொற்றால் 16 நாள்களான குழந்தை யாழில் பரிதாபச் சாவு

யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியில் கிருமி தொற்றால் 16 நாள்களே ஆன குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

கடந்த முதலாம் திகதி தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் தாய் குழந்தையை பிரசவித்துள்ளார்.

இந்நிலையில், குழந்தைக்கு தாய் பால் ஊட்டிய வேளை, பால் குழந்தையின் வாயில் இருந்து வெளியே வந்துள்ளது.

அதனையடுத்துதாயும்குழந்தையும்யாழ்.போதனாவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்நிலையில், குழந்தை 16 ஆம் திகதி உயிரிழந்துள்ளது. உடற்கூற்று பரிசோதனையின் போது கிருமி தொற்றே உயிரிழப்புக்கு காரணம் என கண்டறியப்பட்டுள்ளது. (05)

# தேசபந்து தென்னக்கோனுக்கு சார்பான மனு நிராகரிப்பு

தேசபந்து தென்னக்கோன் பொலிஸ் மா அதிபராக கடமையாற்றுவதை தடுக்கும் வகையில் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவை நீக்குமாறு கோரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு உயர் நீதிமன்றத்தால் புதன்கிழமை நிராகரிக்கப்பட்டுள்ளது.

தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தடை உத்தரவை நீக்குமாறு கோரி பெல்லன்வில தம்மரதன தேரர், அகலகட சிறிசுமண தேரர் மற்றும் கொட்டபிட்டிய ராகுல தேரர் ஆகியோரால் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், இந்த மனு யசந்த கோதாகொட, அச்சல வெங்கப்புலி மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

இந்நிலையில், முதன்மையான ஆதாரங்கள் இல்லாத காரணத்தால் நீதிபதி யசந்த கோதாகொடவால் இந்த மனு நிராகரிக்கப்பட்டுள்ளது. (05)

# யானைத் தாக்குதலுக்கு உள்ளான ஆசிரியர் வைத்தியசாலையில்

காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகிய ஆசிரியர் ஒருவர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு, முள்ளியவளை பகுதியில் இருந்து கேப்பாபிலவு வீதியால் பாடசாலைக்கு சென்று கொண்டிருந்த போது புதுக்குடியிருப்பு கள்ளியடி பாலத்தடியில் இரண்டு யானை வீதியை வழிமறித்து ஆசிரியரின் மோட்டார் சைக்கிளை தூக்கி எறிந்ததோடு குறித்த ஆசிரியரையும் தாக்கிவிட்டு சென்றுள்ளது.

அதனையடுத்து தாக்குதலுக்கு இலக்கான ஆசிரியர் காயங்களோடு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த தாக்குதலுக்கு இலக்கான ஆசிரியர் முள்ளியவளையை சேர்ந்த 28 வயதுடைய உடையார்கட்டு குரவில் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)







# சைவராக வாழ்வோம்!

இந்தப் பரந்து விரிந்த உலகிலே பலம் மிக்கப் பலவாறான மரங்கள் இருந்தாலும் ஆதி அந்தமில்லா மிகவும் தொன்மையான மதமாக எமது சைவ சமயமே திகழ்கின்றது. இவ்வலகிலே பல மதங்கள் பலவாறான கருத்துக்களை முன்வைக்கின்றது எனினும் எமது சைவ சமயம் தருகின்ற அனைத்த விதமான கருத்துக்களும் எமது வாழ்வை வளப்படுத்துபவையாகவும் இவ்வலகத்தையே அன்பினால் மாற்றியமைக்கின்றதாகவும் இருக்கின்றது. அந்தச் சக்தி சைவ சமயத்திற்கு மட்டுமே உண்டு.

அரிது அரது மானிடராய் பிறத்தல் அரிது அதனிலும் அரிது கூன் குருடு செவிடு பேடு நீங்கிப் பிறத்தல் அரிது என்றார் ஔவையார். அந்த வகையில் நாம் இந்தக் கிடைத்தற்கரிய மானிடப்பிறவியை எமது பூர்வ ஜென்ம புண்ணிய பாவத்தின்படி எடுத்திருக்கின்றோம். மனிதனாகப் பிறந்த ஒவ்வோருவரும் தமது வாழ்வில் ஏதாவது ஒரு சமயத்தினைப் பின்பற்றி வாழவேண்டும் என்பது உலக நியதி. அந்த வகையில் நாம் பல உண்மைகளையும் தத்துவ ஞான விளக்கங்களையும் தன்னுள் வைத்திருக்கும் ’சைவ சமயத்திலே பிறந்திருக்கின்றோம். இப்படிப்பட்ட சைவ சமயத்திலே பிறக்க நாம் கோடி புண்ணியம், தவம் செய்திருக்க வேண்டும்.

எமது சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளாக விளங்குபவர் சிவபெருமானே. அவரே இந்த உலகம் முழுவதையம் படைத்துக்காத்தருளுகின்றார். அத்துடன் சக்தியின்றி இயங்காது உலகு என்பர். சிவனுடன் இணைந்த சிவ சக்தியினாலேயே இந்த உலகம் இயங்குகின்றது. சைவர்களாகிய நாம் எமது சமயக் கடவுள்ர்களாக விநாயகர், முருகன், லட்சுமி, சரஸ்வதி, வைரவர், துர்க்கை, சிவன் போன்றவர்களை வணங்குகின்றோம். இக் கடவுள்ர்கள் எடுத்த பல்வேறு அவதாரங்களின் அடிப்படையில் நாம் கடவுளை பல்வேறு வகையிலும் வணங்குகின்றோம். சைவர்களாகப் பிறந்த நாம் எமது சைவ சமயம் சொல்லுகின்ற நியதிகளுக்குக் கட்டுப்பட்டு வாழ வேண்டும்.

சைவரர்களாகிய நாம் சைவ சமயம் உணர்த்துகின்ற விழுமியப் பண்புகளுக்கு இணங்க வாழவேண்டும். எம்மை ஒரு நல்லொழுக்கமுள்ள பிரஜையாக வழிப்படுத்துவது சைவ விழுமியங்களே ஆகும். அந்த வகையில் எம் சைவ சமயம் உணர்த்துகின்ற முதலான பண்புகளில் அன்ப செலுத்துதல் என்பது மேலானதாக அமைந்துள்ளது. அன்பு என்ற ஒரு ஆயுதம் இந்த உலகையே வெல்லக்கூடியது. நாம் எமது குடும்ப உறவுகளையம் சகபாடிகளையும் தாண்டி மிருகங்கள் பறவைகள், மரம், செடி, கொடி போன்ற இவ்வுலகிலுள்ள அனைத்திலும் அன்பு செலுத்தப் பழகிக்கொள்ளவேண்டும். இறைவனுக்கு நாம் செய்கின்ற உயரிய தவமாக அன்பு செலுத்துவதையே வலியுறுத்துகின்றனர். அடுத்து தர்மம் செய்தல். இல்லாதவர்களுக்கு இல்லை என்று சொல்லாது எம்மால் முடிந்த உதவிகளைச் செய்தல்வேண்டும். அதனாலே தான் ஔவையார் அறம் செய்ய விரும்பு என்றார். ஈதல் அறம் எனக் கூறுகின்றார். அந்த வகையில் நாம் தான தர்மங்களைச் செய்தல்வேண்டும் எனவும் எமது சமயம் வலியுறுத்துகின்றது. தானத்தில் சிறந்த தானம் அன்ன தானம் என்பர். அதனால் பசியால் வருந்துவோருக்குப் பசி போக்குபவர் மிகவும் பெருமைக்குரியவர் ஆகின்றார். அதனால்தான் திருவள்ளுவர்,

”ஈ என இரத்தல் இழிந்தன்று அதன் எதிர்

ஈயேன் எனல் அதனினும் இழிந்தன்று’’ எனக் கூறுகின்றார். அதாவது பசியால் வருந்துவோருக்கு உணவு கொடுத்து உதவுபவர்களின் ஆற்றலைத் தவம் செய்பவரின் ஆற்றலோடு ஒப்பிடும்போது அத்தவமானது இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படுகின்றது. இவற்றைப் போல பல விழுமியப் பண்புகளையும் எமது சைவ சமயம் குறிப்பாக ஒப்புரவு ஐம்பொறியடக்கம், நன்றி மறவாமை, சகிப்புத் தன்மை போன்ற பல விடயங்களைக் கூறகின்றது. அதனைப் பின்பற்றி வாழ்வதும் சைவர்களாகிய எமது கடமையாகும்.

எமக்கு சைவர்கள் என்னும் அடையாளத்ததைத் தருபவை சைவ சாதனங்களாகும். இவை சைவ சமயத்திற்கு அடையாளமாக விளங்குகின்றன. எனவே அவை சிவசின்னாங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. அவ்வாறான சிவ சின்னாங்கள்வீபூதி,உருத்திராக்கம்,பஞ்சாட்சரம்என்பவையாகும்.இவற்றள் புறசைவசாதனாங்களாகவீபூதியும்உருத்திராக்கமும்காணப்படுகீன்றன. எனவே சைவ சமயத்தவராகிய ஒவ்வொருவரும் வீபூதி மற்றும் உருத்திராக்கம் அணிவது தலையாய கடமையாகும். அத்துடன் அகச்சைவ சாதனமாக பஞ்சாசர மந்திரங்களையும்உச்சரித்துஇறைவனைநினைத்துத்தவம்செய்யவேண்டும்.

சைவ சமயம் ஆனது எமக்குப் பல்வேறு நன்மைகளைப் போதிக்கின்றது. எமது முன்னோர்கள் சைவ சமயம் கூறுகின்ற கருத்துக்களை நெறி தவறாது பின்பற்றி வந்தனர். ஆனால் தற்கால சந்ததியினர் சைவர்களாக இருந்தும் சைவம் கூறுகின்ற நடைமுறைகளைப் பின்பற்றாமல் வாழ்கின்றனர். அதற்குப் பிரதான காரணம் வேற்ற மத கலாசாரங்கள் எமது மதத்திற்குள் ஊடுருவியுள்ளமை. குறிப்பாக கோயில்களுக்கு அணிந்து செல்லும் ஆடைகள். தலை முடி கடட்டும் விதம் போன்ற பல நடவடிக்கைகள் எமது சமயத்திற்கு முரணானவையாகவே இருக்கின்றன. இக்காலச் சமூகம் தன்னுடைய சுயநலத்திற்காக எமது சமயக் கடமைகளை மறந்து ஓடிக்கொண்டிருக்கின்றனர். எமத சமயமான சைவ சமயம் அழிந்துபோக நேர்ந்த காலங்களில் தமது உயிரைவிட சைவ சமயத்தை மேலாக மதித்து அரும் பாடுபட்டு எமது சமயத்தை மீட்டனர். அந்த வகையில் உலகமே பார்த்து வியந்து நிற்கும் எமது சைவ சமயத்தின் பல அற்புத அதிசயங்களை உணர்ந்த அவை கூறுகின்ற அனைத்து நற்கருத்துக்களையும் பின்பற்றி நல்லொழுக்கமுள்ள சைவர்களாக வாழ்ந்து எமது சைவ சமயத்தினைப் பெருமைப்படுத்துவோம்.


**கோ. யாழிசை**
**தரம் 11**



காலைக்கதிர் Kalaikkathir

## அனைவரும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)




குழுவினருக்கும், மாணவர்களுக்கும் வாக்களிக்கச் செல்லும் வகையில் விடுமறை வழங்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தியுள்ளோம்.

வாக்கெடுப்பு நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள், நிலைய பணியாட் குழுவினர், வாக்கெடுப்பு நிலைய கடமைகளில் ஈடுபடும் பொலிஸார், வேட்பாளர்களின் தேர்தல் முகவர்கள், வேட்பாளர்களினால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள், ஒவ்வொரு வேட்பாளர் சார்பாக முறைப்படி நியமிக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலைய முகவர்கள், தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அனுமதிப் பெற்ற உள்நாட்டு மற்றும் சர்வதேச கண்காணிப்பு ஒழுங்கமைப்புக்களின் முகவர்கள், தெரிவத்தாட்சி அலுவலரின் அனுமதிபெற்ற அலுவலர்கள் ஆகியோர் மாத்திரமே வாக்களிப்பு நிலையத்துக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

வாக்கெடுப்பு மத்திய நிலையத்திலும், வாக்கெண்ணும் நிலையங்களிலும் கையடக்கத் தொலைபேசிகளைப் பாவித்தல், நிழற்படமெடுத்தல், காணொளி பதிவேற்றம் செய்தல், ஆயுதங்களை தம்வசம் வைத்திருத்தல், புகைப்பிடித்தல், மதுபானம் அருந்துதல் அல்லது போதைப்பொருள் பாவித்துவிட்டு வருகை தருதல் என்பன தகாத செயற்பாடுகளாகக் கருதப்படும். தடை செய்யப்பட்ட இச்செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்குஎதிராகசட்டநடவடிக்கைகள் எடுக்கப்படும்.

காலை 7 மணிமுதல் 4 மணி வரை வாக்களிப்பதற்கு காலவகாசம் வழங்கப்பட்டுள்ளது. வாக்களிக்கச் செல்பவர்கள் வாக்குச்சீட்டுடன் தேசிய அடையாள அட்டையை கொண்டுச் செல்லவேண்டும். தேசிய அடையாள அட்டை இல்லாதவிடத்து தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக வெளிநாட்டு கடவுச்சீட்டு, வாகன சாரதி அனுமதிப்பத்திரம், ஓய்வூதியர் அடையாள அட்டை, மூத்த குடிமக்களுக்கான அடையாள அட்டை, தேர்தல்கள் ஆணைக்குழு வழங்கியுள்ள தற்காலிக அடையாள அட்டை ஆகியவற்றில் ஒன்றினை வாக்களிப்பு நிலையத்தில் காண்பித்து வாக்களிக்க முடியும்.

வாக்காளர்கள் தமது வாக்கினை வேட்பாளர் ஒருவருக்கு 1 என்று இலக்கமிட்டோ அல்லது (X) புள்ளடியிட்டோ வழங்க முடியும். 1 என்று இலக்கமிட்டு வாக்களித்ததன் பின்னர் 2 , 3 என்று விருப்பு வாக்கினை அளிக்க முடியும் .(X) புள்ளடியிட்டு வேட்பாளருக்கு வாக்களித்திருந்தால் விருப்பு வாக்களிக்க முடியாது.

பொதுமக்கள் அமைதியான முறையில் வாக்களித்துவிட்டு வீடு செல்லவேண்டும். ஏதேனும் வாக்களிப்பு நிலையத்தில் முரண்பாடுகள் இடம்பெற்று அதனால் வாக்களிப்புக்குப் பாதிப்பு ஏற்பட்டால் அந்த வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்பு செயற்பாடுகள் முற்றாக இடைநிறுத்தப்படும். பிறிதொரு தினத்தில் அந்த தொகுதிக்கு வாக்களிப்பை நடத்த நேரிடும். அவ்வாறு நேர்ந்தால் உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிடுவது தாமதமாகும். ஆகவே பொது மக்கள் அவதானத்துடனும் பொறுப்புடனும் செயற்பட வேண்டும்.

புதன்கிழமை (18) நள்ளிரவுடன் தேர்தல் பரப்புரைக்காலம் நிறைவடைந்துள்ளது. அதன் பின்னர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது. வாக்களிப்பு மத்திய நிலையத்தில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் வேட்பாளரின் இல்லம் காணப்படுமாயின் அதில் தேர்தல் பதாதைகள் மற்றும் பரப்புரைச் சுவரொட்டிகளை காட்சிப்படுத்த முடியாது.

நாடு முழுவதும் 13 ஆயிரத்து 423 வாக்களிப்பு நிலையங்களில் அளிக்கப்படும் வாக்குகள் 1713 மத்திய நிலையங்கள் ஊடாக எண்ணப்படும். சனிக்கிழமை (21) பி.ப. 4.15 மணிக்கு தபால் மூல வாக்குகள் எண்ணத் தொடங்கப்படும். தபால் மூல வாக்குகள் எண்ணப்படும் போது ஒரு வேட்பாளர் சார்பில் அவரது 2 பிரதிநிதிகளும், ஏனைய வாக்குகள் எண்ணப்படும்போது ஒரு வேட்பாளர் சார்பில் அவரது 5 பிரதிநிதிகளும் கலந்துக் வாக்கு எண்ணல் மத்திய நிலையத்துக்கு வருகை தர முடியும். வாக்கு எண்ணும் மத்திய நிலையத்தில் தொலைபேசிகளை பாவிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

தேர்தலில் 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்கினை எவரேனும் வேட்பாளர் பெறாத சந்தர்ப்பத்தில் விருப்பு வாக்குகள் எண்ணப்படும். கடந்த காலங்களில் இவ்வாறான நிலைமை ஏற்படவில்லை. இம்முறை விருப்பு வாக்குகளை எண்ணும் சாத்தியம் காணப்படுகிறது.

கூட்டம்கூட்டமாகவாக்களிப்புநிலையத்துக்கு செல்வதை தவிர்த்துக்கொள்ளுங்கள். வாக்களித்ததன் பின்னர் அமைதியான முறையில் வீடுகளுக்கு செல்லுங்கள். பொது இடங்களில் ஒன்று கூடுவது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. உத்தியோகபூர்வஅறிவிப்பு வெளியாகுவதற்கு முன்னர் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்படுவது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும்போது வீடுகளில் இருங்கள். தேவையற்ற பிரச்சினைகளை தோற்றுவிப்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள். ஏதேனும் அசம்பாவிதங்கள் இடம்பெற்று இழப்புக்கள் ஏற்பட்டால் அந்த நபரின் குடும்ப உறுப்பினர்கள் மாத்திரமே பாதிக்கப்படுவார்கள். ஆதரவளிக்கும் வேட்பாளர்களுக்குஎவ்விதபாதிப்பும்ஏற்படாது. ஆகவே அவரவர் குடும்பத்தை கருத்திற் கொண்டு பொறுப்புடன் செயற்படுங்கள்.

சுதந்திரமாகவும், நியாயமானதாகவும் தேர்தலை நடத்த பாதுகாப்புத் தரப்பினர் முழுமையானஒத்துழைப்பைவழங்குவார்கள். தேர்தல் சட்டத்துக்கும், பொதுச்சட்டத்துக்கும் முரணாகச் செயற்படுபவர்களுக்கு எதிராகச் செயற்படுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தேர்தல்கள் ஆணைக்குழு ஊடாகவே உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்படும். செப்டெம்பர் 22 மாலைக்குள் உத்தியோகபூர்வ முடிவுகளை வெளியிட எதிர்பார்த்துள்ளோம். ஆணைக்குழு மீது நம்பிக்கை வையுங்கள் - என்றார்.

## தலையிடியாகிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகத்திற்கு மோட்டார் சைக்கிளில் வந்துள்ளார். தனது தலைக் கவசத்தை மோட்டார் சைக்கிளிலேயே கொழுவி வைத்துள்ளார். யாரோ அதனைத் திருடிச் சென்றுவிட்டார்கள்.

தொடருந்து நிலையத்தினுள் உள்ள பிளாட்பாரத்தில் அவரது மோட்டார் சைக்கிளை நிறுத்த அனுமதிக்காமையே திருட்டுக்கான காரணம் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. தொடருந்துக் கட்டுப்பாட்டாளர்கள் மோட்டார் சைக்கிளை பிளாட்பாரத்தில் நிறுத்துமாறு கோரிக்கை விடுத்தும் அனுராதபுரம் நிலைய அத்தியட்சகர் அதற்கு அனுமதி வழங்கவில்லை என்பதே இத்தகைய திருட்டுக்கு வழி ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்று குற்றஞ்சாட்டிய கட்டுப்பாட்டாளர்கள் திடீர் பணி நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனால் யாழ்ப்பாணத்திற்கான தொடருந்து சேவை பாதிக்கப்பட்டது.

## சமூக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் கண்காணிப்பு அமைப்புகளின் அறிக்கைகளின்படி, சமூக ஊடகங்களில் பரப்பப்படும்தவறானதகவல்கள்அகற்றப்படும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் வாக்கு எண்ணும் நிலையங்களில் கைத்தொலைபேசிகளைபயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட இடங்களை புகைப்படம் மற்றும்வீடியோஎடுப்பதைதவிர்க்கவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## மேலும் 3.3....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதியியல்கட்டமைப்பைஉறுதிப்படுத்துவதற்கும் முடியும் என்றும் ஜனாதிபதி செயலகம் எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளது.

20224 ஜுன் 21 முதல்- ஜுலை 2 வரையான காலப்பகுதியில் இலங்கை ஆளும்தரப்பு சர்வதேச பிணைமுறிதாரர் குழுவுடன் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான பேச்சுக்களை நடத்தியிருந்தது. இதில், சட்ட மற்றும் நிதியியல் ஆலோசகர்களான க்ளிஃபோர்ட் சான்ஸ் எல்.எல்.பி, லிஸார்ட், வைட் அன்ட் கேஸ் மற்றும் ரொத்ஸ்சைல்ட் அன்ட் கோ ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

அதேபோன்று இலங்கையின் பிணை முறிகளில் 50 சதவீத பிணைமுறிகளின் உரித்தாளர்களான 10 முக்கிய தரப்பினரை உள்ளடக்கியிருக்கும் சர்வதேச பிணைமுறிதாரர் குழுவின் நிர்வாகக்குழு 2024 ஜுன் 27, 28 நாள்களில் பாரிஸில் கலந்துரையாடலொன்றை நடத்தியிருந்தது.

அதனையடுத்து 2024 ஜுலை மாத முற்பகுதியில் கடன் உறுதிப்பாடு குறித்த சர்வதேசநாணயநிதியத்தின்நிபந்தனைகளுக்கு அமைவாக இலங்கைக்கும் சர்வதேச பிணைமுறிதாரர் குழுவினருக்கும் இடையில் 37 பில்லியன் டொலர் பெறுமதியுடைய மொத்த சர்வதேச கடன்களில் 12.5 பில்லியன் டொலர் பெறுமதியான சர்வதேசப் பிணைமுறிகளை மறுசீரமைப்பு செய்வதற்கான ஆரம்பகட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது என்று ஆளும் தரப்பு தெரிவித்துள்ளது.

## பணிக்குத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகார சபையினரிடம் கையளித்தார். நெடுந்தாரகை பயணிகள் படகின் திருத்தப் பணிகளுக்காக துரித நடவடிக்கையை மேற்கொண்ட ஜனாதிபதிக்கும், ஜனாதிபதி செயலகத்திற்கும், துறைசார் அமைச்சுக்கும் இதன்போது ஆளுநர் நன்றியை தெரிவித்தார்.

இந்தப் பயணிகள் கப்பல் 52 மில்லியன் ரூபா செலவில் திருத்தப்பட்டுள்ளது. இன்று முதல் பயணிகள் சேவையை ஆரம்பித்துள்ள நெடுந்தாரகை தினமும் நெடுந்தீவில் இருந்து ஒருதடவை குறிகட்டுவான் இறங்குத்துறைக்கு பயணிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. நெடுந்தாரகை படகில் ஒரு தடவையில் 80 பேர் பயணிக்க முடியும்.

## மனைவியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று ஆத்திரமடைந்த கணவன் இந்தத் தகாத செயலில் ஈடுபட்டார் என்றும் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனது மனைவியின் இரகசிய உறவு குறித்து அவருக்குப் பல தடவைகள் எச்சரிக்கைவிடுத்தபோதும் அவர் அதனை உதாசீனம் செய்ததால் தான் அவரது கையை வெட்டினார் என்று சந்தேகநபர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த மனைவி (42 வயது)தெலிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

## கடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்வதற்கு வெளி வணிகக் கடன் வழங்குநர்களுடன்இலங்கைஒப்பந்தங்களை எட்டியுள்ளது

கடைசியாக எட்டப்பட்ட 3.3 பில்லியன் டொலர் கடன்மறுசீரமைப்பு இணக்கப்பாட்டுடன் 17.5 பில்லியன் டொலர் கடன்மறுசீரமைப்புக்கான இணக்கம் எட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் 4--0% சலுகை கிடைக்கும் என்று ஆளும் தரப்பின் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

இது தொடர்பில் ஊடகங்கள் செய்தி வெளியிடுவதைத் தவிர்க்குமாறு தேர்தல் ஆணைக்குழுவிடம் சட்டத்தரணி ஷியான் புஞ்சிஹேவா வலியுறுத்தியுள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# கொழும்பில் வீடொன்றுக்குள் நுழைந்து பெருந்தொகை பணத்தைத் திருடிய 4 பொலிஸாருக்கு விளக்க மறியல்

கொழும்பில் வீடொன்றுக்குள் நுழைந்து பெருந்தொகை பணத்தைத் திருடிய 4 பொலிஸார் கொழும்பு, முகத்துவாரம் பிரதேசத்தில் உள்ள வீடொன்றிற்குள் அத்துமீறி நுழைந்து பெருந்தொகை பணத்தைத் திருடிய சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களை ஸ்ரீவியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் கேமிந்த பெரேரா உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபர்கள் நால்வரும் புதன்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

புளுமெண்டால் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் நால்வரும் முகத்துவாரம் பிரதேசத்தில் உள்ள வீடொன்றிற்குள் அத்துமீறி நுழைந்து வீட்டு உரிமையாளரை அச்சுறுத்தி 1.4 மில்லியன் ரூபா பணத்தைத் திருடிய சம்பவம் தொடர்பில் முகத்துவாரம் பொலிஸாரால் புதன்கிழமை கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(05)

# பொலிஸ் அதிகாரிகள் மீது தாக்குதல் சகோதரர்கள் உட்பட நால்வர் கைது

மது போதையில் பெண் ஒருவரைத் தாக்கி காயப்படுத்திய கும்பலைக் கைது செய்யச் சென்ற பொலிஸ் அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்திய சகோதரர்கள் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என எம்பிலிப்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

கும்புகொட மற்றும் எம்பிலிப்பிட்டிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 19, 23 மற்றும் 30 வயதுடைய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சகோதரர்கள் உட்பட நால்வரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

எம்பிலிப்பிட்டிய பிரதேசத்திற்கு மது போதையில் சென்ற கும்பல் ஒன்று பெண் ஒருவரைத் தாக்கி காயப்படுத்துவதாக எம்பிலிப்பிட்டிய பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து, சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸ் அதிகாரிகள் சிலர் சந்தேக நபர்களைக் கைது செய்து பொலிஸ் ஜீப்பில் ஏற்ற முயன்றுள்ளனர்.

இதன்போது, சந்தேக நபர்கள் நால்வரும் பொலிஸ் அதிகாரிகளைத் தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச் செல்ல முயன்ற போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, காயமடைந்த பொலிஸ் அதிகாரிகள் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை எம்பிலிப்பிட்டிய தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)



# வர்த்தக நிலையம் தீயில் எரிந்து சேதம்

### தெய்யந்தர பகுதியில் சம்பவம்

மாத்தறை, தெய்யந்தர நகரத்தில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்று தீயில் எரிந்து சேதமடைந்துள்ளதாக தெய்யந்தர பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் புதன்கிழமை நள்ளிரவு 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதுதொடர்பில் தெரியவருவதாவது -

வர்த்தக நிலையத்தின் உரிமையாளருக்கு பிரதேசவாசி ஒருவர் தொலைபேசியில் அழைப்பு விடுத்து இந்த தீ பரவல் தொடர்பில் தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் உடனடியாக பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

பின்னர், பொலிஸார் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து தீ பரவலை கட்டுப்படுத்தியுள்ளனர்.

மின்கசிவு காரணமாக இந்த தீ பரவல் ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்த தீ பரவலால் சுமார் 15 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

(05)

# 3 ஆயிரத்து 570 கஞ்சா செடிகளுடன் தணமல்விலவில் ஒருவர் மாட்டினார்

மொனராகலை, தணமல்வில பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சூரியஆர பிரதேசத்தில் கஞ்சா செடிகளுடன் சந்தேக நபரொருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் செவ்வாய்க் கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தணமல்வில, சூரியஆர பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 3,570 கஞ்சா செடிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக தணமல்வில பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தணமல்வில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

### கிறீம் பூசி தலைமுடி உதிர்ந்த விவகாரம்

# அழகுக் கலை நிலையத்தின் பணியாளருக்குப் பிணை

பெண்ணின் தலை முடி உதிர்ந்து விழும் அளவுக்கு கிறீம் வகைகளைப் பூசிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அழகு கலை நிலையம் ஒன்றின் பணிப்பெண்ணை 2 லட்சம் ரூபா வீதம் இரண்டு சரீரப் பிணையில் விடுதலை செய்ய மினுவாங்கொடை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மினுவாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய பணிப்பெண்ணே இவ்வாறு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது - மினுவாங்கொடை பொரகொடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய பெண்ணொருவர் திருமணநிகழ்வொன்றுக்கு செல்வதற்காக தனது தலை முடியை அழகு படுத்த கடந்த ஒகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி அன்று மினுவாங்கொடை நகரத்தில் உள்ள அழகுக்கலை நிலையம் ஒன்றிற்கு சென்றுள்ளார்.

இதன்போது, குறித்த அழகு கலை நிலையத்தின் பணிப்பெண்கள் பாதிக்கப்பட்ட பெண்ணின் தலைமுடியில் கிறீம் வகைகளை பூசியுள்ளனர். இதன்போது, இந்த பெண்ணின் தலைமுடிகள் திடீரென உதிர்ந்து விழுந்துள்ளன.

பின்னர், பாதிக்கப்பட்ட பெண் இது தொடர்பில் மினுவாங்கொடை பொலிஸ் நிலையத்தின் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

இதனையடுத்து, சந்தேக நபர்களைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு மினுவாங்கொடை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், அந்நிலையத்தின் உரிமையாளரும் இரண்டு பணிப்பெண்களும் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்று தலைமறைவாகியிருந்த நிலையில், ஒரு பணிப்பெண் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னர் புதன்கிழமை பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.(05)

# 10 வாள்களுடன் ஒருவர் மாத்தறையில் கைது

மாத்தறை, தெய்யந்தர, அத்தப்பத்துகந்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்துவைக்கப்பட்டிருந்த 10 வாள்களுடன் சந்தேக நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெய்யந்தர பொலிஸார் தெரிவித்தனர்.

தெய்யந்தர பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தெய்யந்தர, அத்தப்பத்துகந்த பிரதேசத்தில் வசிக்கும் 62 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சுற்றிவளைப்பின் போது குறித்த வீட்டின் அறையொன்றில் இருந்த கட்டிலுக்கு அடியில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 10 வாள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தெய்யந்தர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# இருவருக்கு இடையில் தகராறு : ஒருவர் சாவு: சந்தேகநபர் கைது

கொடகவல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்பல்யாய பிரதேசத்தில் இரு நபர்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறில் ஒருவர் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் என கொடகவல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

உடுகும்புர ஹபுகஸ்தென்ன பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய நபரொருவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இரு நபர்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறு எல்லை மீறியதில் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் காயமடைந்தவர் கொடகவல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யபட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, கொலை செய்யப்பட்டவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கொடகவல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை கொடகவல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# வெடிபொருள்களுடன் நால்வர் நாவுலவில் கைது

மாத்தளை, நாவுல பிரதேசத்தில் வெடிபொருள்களுடன் நான்கு சந்தேக நபர்கள் புதன்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளதாக நாவுல பொலிஸார் தெரிவித்தனர்.

நாவுல பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் சந்தேகத்திற்கு இடமான முறையில் பயணித்த ஓட்டோ ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாவுல, புஸ்ஸெல்லாவ, உடதலவின்ன மற்றும் வத்தேகம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 38, 49 மற்றும் 50 வயதுடைய நால்வரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 05 டெட்டனேட்டர் குச்சிகள் மற்றும் 03 வோட்டர் ஜெல் குச்சிகள் ஆகிய வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நாவுல நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(05)

# கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயத்தின் 90 ஆவது ஆண்டு நிறைவும் முத்தமிழ் விழாவும்






கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயத்தின் 90 ஆவது ஆண்டு நிறைவையொட்டி அயலில் உள்ள எட்டுப் பாடசாலைகளை இணைத்து முத்தமிழ் விழா செவ்வாய்க்கிழமை யாழ்.கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலய மண்டபத்தில் மிகவும் சிறப்பாகவும் கோலாகலமாகவும் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பாடசாலையின் ஸ்தாபகர் வைத்தியர் அமரர் அப்பாப்பிள்ளை சின்னத்துரை அவர்களின் திருவுருவச் சிலை திறந்து வைக்கப்பட்டதுடன் இத்திருவுருவச் சிலையை ஸ்தாபகரின் பேரனார் மாணிக்கவாசகர் ஜெயக்குமாரும் ஸ்தாபகரின் பெறாமகன் சுப்பிரமணியம் விஜயகுமாரும் இணைந்து திறந்து வைத்தனர்.

பாடசாலையின் 90 ஆவது ஆண்டு நிறைவையொட்டி முத்தமிழ் மலர் (நாமகள் 01) மலரை வெளியிட்டு உரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் ஆற்றினார். மேலும் மாணவர்களின்கலைநிகழ்வுகளும்சிறப்பாகநடைபெற்றதுடன் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ்கள் கேடயங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அயலில் உள்ள எட்டுப் பாடசாலைகளை இணைத்து நடைபெற்ற இந்த முத்தமிழ் விழாவானது பாடசாலையின் முதல்வர் லயன் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக லண்டனில் வசிக்கும் ஸ்தாபகரின் பேரனார் மாணிக்கவாசகர் ஜெயக்குமார் அவர்களும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசனும், கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பாலசிங்கம் வாசுதேவனும் கலந்துகொண்டனர்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.09.2024இல் வெளியிடப்பெற்றது